In the Court of the Magalir Neethimandram Fast Track Mahila Court, Thoothukudi

S.C.No.97/2022

Deposition of P.W.1

| | |
|---|---|
| Name | திருமதி.லதா(கிராம நிர்வாக அலுவலர்) |
| Father's Name/Husband's Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Calling | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Evidence Act Chapter X of 1872 on the 09th day of March 2026.

(எதிரிகள் ஆஜர் .)

**முதல் விசாரணை :**

நான் தற்போது பி.துரைச்சாமிபுரம் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் தெற்குகல்மேடு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி செய்து வந்தேன். அதுசமயம் கடந்த 23.04.2021 அன்று மதியம் 2.45 மணியளவில் தலையாரி பாலமுருகன் என்பவருக்கு கிடைத்த தகவலின்அடிப்படையில் 3 மணியளவில் நானும், தலையாரியும் சம்பவ இடமான தெற்குகல்மேடு கிராமத்தில் இருந்து துரைச்சாமிபுரம் கிராமத்திற்கு வலதுபுறமாக செல்லும் ஒத்தையடி பாதையில் இடதுபுறமாக உள்ள வேலிகருவேலம் மரங்களுக்கு மத்தியில் ஒரு பெண் பிரேதம் எரிந்த நிலையில் கிடந்தது. இடது உள்ளங்கைகளுக்கு கீழும், கால்பாதங்களும் தீக்காயம் இல்லாமல் இருந்தது. உடலில் மற்ற பாகங்களில் தீக்காயங்கள் காணப்பட்டது. பிரேதத்தை பார்வையிட்டு தருவைகுளம் காவல் நிலையம் சென்று சந்தேகத்திற்கிடமான வகையில் பெண் பிரேதம் எரிந்த நிலையில் கிடப்பதாக புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு

நான் கொடுத்ததுதான். புகார் மனு அசா.ஆ.1. பின்னர் மாலை 6.15 மணியளவில் காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து பிரேதத்தை பார்வையிட்டு விசாரணை நடத்தினார். பிரேதத்தில் இருந்து 1. பிங்க்கலர் பார்டருடன் கூடிய பாதி எரிந்தநிலையில் இருந்த சேலையின் பார்டர், 2. இரண்டு ஜிமிக்கி கம்மல்கள், 3. ஊக்கு கோர்த்த நிலையில் பித்தளை தாலி செயின், 4. இரண்டு கால் கொலுசுகள், 5. பாதி எரிந்த நிலையில் பேனா மூடி ஒன்று, 6. ரேகா கம்பெனி பெயர் பொறித்த கீசெயின் ஒன்று, அந்த கீ செயினில் 35312 என்று எண் இருந்தது, 7. தலைமுடியில் உள்ள ே◌ஹர் கிளீப் ஒன்று, 8. கருப்புநிற முககவசம் ஒன்று, 9. உருகியநிலையில் காணப்பட்ட பிளாஸ்டிக் கொஞ்சம், 10. மெட்டி ஆகியவற்றை தருவைகுளம் காவல்நிலைய பொறுப்பு ஆய்வாளர் என்முன்னிலையிலும், தலையாரி பாலகிருஷ்ணன் என்பவர் முன்னிலையிலும் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.2. பின்னர் அதேதினம் 6.30 மணிக்கு ரத்தக்கறை படிந்த மண் கொஞ்சம், ரத்தக்கறை படியாத மண் கொஞ்சம், எரிந்த நிலையில் உள்ள மண் கொஞ்சம் அத்தாட்சியில் கைப்பற்றினார்கள். அதில் நானும், பாலகிருஷ்ணனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.3. 1. பிங்க்கலர் பார்டருடன் கூடிய பாதி எரிந்தநிலையில் இருந்த சேலையின் பார்டர் சா.பொ.1, 2. இரண்டு ஜிமிக்கி கம்மல்கள் சா.பொ.2, 3. ஊக்கு கோர்த்த நிலையில் பித்தளை தாலி செயின் சா.பொ.3, 4. இரண்டு கால் கொலுசுகள் சா.பொ.4, 5. பாதி எரிந்த நிலையில் பேனா மூடி ஒன்று சா.பொ.5, 6. ரேகா கம்பெனி பெயர் பொறித்த கீசெயின் ஒன்று சா.பொ.6, அந்த கீ செயினில் 35312 என்று எண் இருந்தது, 7. தலைமுடியில் உள்ள ே◌ஹர் கிளீப் ஒன்று சா.பொ.7. 8. கருப்புநிற முககவசம் ஒன்று சா.பொ.8. 9. உருகியநிலையில் காணப்பட்ட பிளாஸ்டிக் கொஞ்சம் சா.பொ.9. 10. மெட்டி

சா.பொ.10. ரத்தக்கறை படிந்த மண் கொஞ்சம் சா.பொ.11, ரத்தக்கறை படியாத மண் கொஞ்சம் சா.பொ.12, எரிந்த நிலையில் உள்ள மண் கொஞ்சம் சா.பொ.13. பின்னர் 26.04.2025ம் தேதி மாலை நேரத்தில் தருவைகுளம் போலீசார் போன் மூலமாக என்னை காவல் நிலையம் வர சொன்னார்கள். நானும், கிராம உதவியாளரும் காவல் நிலையத்திற்கு போனோம். எதிரி சுப்புராஜ் என்பவரை போலீசார் பிடித்து வைத்திருந்தார்கள். அந்த எதிரியை எங்கள் முன்னிலையில் காவல் ஆய்வாளர் விசாரித்தார். விசாரித்தபோது எதிரி சுப்புராஜ் எப்படி கொலை சம்பவத்தை செய்தோம் என்பதை சொன்னார். அவர் கொடுத்த வாக்குமூலத்தை ஆய்வாளர் பதிவு செய்து என்னிடமும், கிராம உதவியாளரிடமும் சாட்சி கையொப்பம் வாங்கினார்கள். என்னிடம்காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4. கல்மேட்டில் இருந்து வேடநத்தம் செல்லும் சாலையில் ஒரு பால்பண்ணை பக்கத்தில் உள்ள முள்புதரில் இருந்து இரவு 10மணியளவில் எதிரி சுப்புராஜ் ஒரு TVS XL TN 69 4395 என்ற இருசக்கர வாகனத்தை எடுத்து ஆஜர் செய்தார். ரத்தக்கறை படிந்த சாக்கு ஒன்றையும் முள்புதரில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார். வாகனத்தையும், ரத்தக்கறை படிந்த சாக்கையும் அத்தாட்சியில் ஆய்வாளர் கைப்பற்றி எங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார். அந்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவதுதான் அத்தாட்சி அ.சா.ஆ.5. TVS XL TN 69 4395 என்ற இருசக்கர வாகனம் சா.பொ.14. ரத்தக்கறை படிந்த சாக்கு ஒன்று சா.பொ.15. பின்னர் 10.30மணியளவில் பால்பண்ணையில் மாட்டு தீவனம் வைத்திருக்கும் பகுதியில் இருந்து வெள்ளைநிற பிளாஸ்டிக் கேன் ஒன்றை எதிரி எடுத்து ஆஜர் செய்தார். ஆய்வாளர் அத்தாட்சி தயார் செய்து பிளாஸ்டிக் கேனை கைப்பற்றி

எங்களிடம் சாட்சி கையொப்பம் வாங்கினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ 6. வெள்ளைநிற பிளாஸ்டிக் கேன் ஒனறு சா.பொ.16. பின்னர் அதேதினம் 23.45 மணிக்கு முத்துசெல்வம் என்பவரது வீட்டின் முன்பு நின்றிருந்த TN 96 B 1899 என்ற பதிவு எண் கொண்ட Splendar Plus Bike ஐ எதிரி அடையாளம் காட்டினார். அதனை ஆய்வாளர் என் முன்னிலையிலும், தலையாரி பாலகிருஷ்ணன் என்பவர் முன்னிலையிலும் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.7. TN 96 B 1899 என்ற பதிவு எண் கொண்ட Splendar Plus Bike சா.பொ.17. பின்னர் 29 ம்தேதி காலை 6 மணிக்கு எதிரிகள் சங்கர், நீலமேகம் ஆகியோரை கைது செநய்திருப்பதாகவும் அவர்களை விசாரிக்க இருப்பதாகவும் காவல் நிலையத்திற்கு வருமாறும், காவல் நிலையத்தில் இருந்து தகவல் கிடைத்து நானும், தலையாரி பாலகிருஷ்ணனும் காவல் நிலையத்திற்கு காலை 7 மணியளவில் போனோம். அப்போது எதிரி சங்கர் தானாக முன் வந்து ஒரு வாக்குமூலம் அளித்தார். அந்த வாக்குமூலத்தில் நானும், தலையாரியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கையொப்பம் அ.சா.ஆ 8. பின்னர் எதிரி நீலமேகம் தானாக முன் வந்து ஒரு வாக்குமூலம் அளித்தார். அந்த வாக்குமூலத்தில் நானும், தலையாரியும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கையொப்பம் அ.சா.ஆ 9. பின்னர் அதேதினம் 11 மணிக்கு எதிரி சுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமான பால்பண்ணைக்கு அருகில் உள்ள முள்புதரில் இருந்து எதிரி சங்கர் எடுத்து ஆஜர் செய்த ரத்தக்கறை படிந்த அருவாள் ஒனறை ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.10. ரத்தக்கறை படிந்த அருவாள் ஒன்று சா.பொ.18. பின்னர் அதேதினம் 11.30 மணியளவில்

எதிரி சுப்பிரமணியனுக்கு சொந்தமான பால்பண்ணையில் உள்ள மாட்டுதீவனம் வைக்கும அறையில் இருந்து எதிரி எடுத்துஆஜர் செய்த ரத்தக்கறை படிந்த சட்டை ஒன்றையும், ரத்தக்கறை படிந்த சாரம் ஒன்றையும் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அதில் நானும், தலையாரி பாலகிருஷ்ணனும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.11. ரத்தக்கறை படிந்த சட்டை ஒன்று சா.பொ.19, ரத்தக்கறை படிந்த சாரம் ஒன்று சா.பொ.20. பின்னர் எதிரி நீலமேகம் பகல் 12 மணியளவில் எதிரி சுப்பிரமணியன் என்பவருக்கு சொந்தமான பால்பண்ணையில் மாட்டுதீவனம் வைக்கும் அறையில் இருந்து எடுத்து ஆஜர் செய்த சட்டை ஒன்றையும், சாரம் ஒன்றையும் ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றினார். அந்த அத்தாட்சி அ.சா.ஆ.12. சட்டை ஒன்று சா.பொ.21. சாரம் ஒன்று சா.பொ.22. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>1 முதல் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :

நான் தற்போது தூத்துக்குடியில் குடியிருந்து வருகிறேன்.தெற்கு கல்மேடு கிராமத்தில் வேலை பார்த்து வந்தபோது தூத்துக்குடியில் தங்கியிருந்தேன் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலக விதிமுறைகளின்படி பணிபுரியும் அதேகிராமத்தில் தங்கியிருக்க வேண்டும் என்றால் சரிதான். பொதுவாக ஒரு குற்ற நிகழ்வு தொடர்பாக தகவல் கிடைத்தால் அந்த இடத்தை பார்வையிட்டு அங்கு கிடைக்கக்கூடிய பொருட்களை அறிக்கையில் குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான். அ.சா.ஆ.1 புகாரில் இறந்தநபரின் பிரேதத்தில் வெட்டுகாயங்கள் காணப்பட்டதாகவோ அருகில் ரத்தம் சிதறி கிடந்ததாகவோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த அ.சா.ஆ.1 புகாரில் சம்பவ இடத்தில் இருந்து ஆய்வாளர் அத்தாட்சியில் கைப்பற்றியதாக

சொல்லக்கூடிய சான்று பொருட்கள் சம்பவ இடத்தில் காண கிடைத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பிளாஸ்டிக் கேன், கருப்புநிற முககவசம், ரெக்கான் என குறிக்கப்பட்ட சாவி ஆகியவவை சம்பவ இடத்தில் கிடந்ததாக அ.சா.ஆ1ல் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னுடைய கிராமத்தில் சந்தேகத்திற்குரிய மரணம் குறித்து தகவல் கிடைக்கப்பெற்றால் அதனை உரிய பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் உயரதிகாரிகளுக்கு தகவல் சொல்லவேண்டும் என்றால் சரிதான். நான் போன் மூலமாக சொன்னேன். அ.சா.ஆ.1 புகாரில் உயரதிகாரிக்கு தகவல் கொடுத்ததாகவோ அல்லது உயரதிகாரி அறிவுறுத்தியதன்பேரில் புகார் கொடுத்ததாகவோ சொல்லவில்லை என்றால் சரிதான். சந்தேகத்திற்கிடமான வகையில் மரணம் நிகழ்ந்திருந்தால் வருவாய் கோட்டாட்சியர் விசாரணை நடத்துவது வழக்கம் என்றால் சரியல்ல. அ.சா.,ஆ.2 அத்தாட்சியில் எனது கையொப்பத்திற்கு கீழே 24.04.2021 என எழுதப்பட்டு பின்னர் 23.04.2021 என திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதை நான் தான் செய்தேனா என்று ஞாபகமில்லை. தருவைகுளத்தில் இருந்து தெற்குகல்மேட்டிற்கு வரவேண்டும் என்றால் பட்டிணம்மருதூர் வழியாக தான் வரவேண்டும் என்றால் சரிதான். தருவைகுளத்திற்கு தனியாக கிராம நிர்வாக அலுவலர் உண்டு என்றாலும் பட்டிணம் மருதூர் கிராமத்திற்கு தனியாக கிராம நிர்வாக அலுவலர் உண்டு என்றாலும்சரிதான். 3ம் எதிரியை விசாரிக்கும்போது சாட்சியாக காவல் துறையினர் என்னை அழைத்தபோது தருவைகுளம் கிராம நிர்வாக அலுவலரையோ அல்லது பட்டிணம்மருதூர் கிராம நிர்வாக அலுவலரையோ ஏன் அழைக்கவில்லை என்று கேட்டேனா என்றால் அப்படி நான் கேட்கவில்லை. என்னுடைய வருவாய் கிராமத்தில் இருந்து மற்றொரு கிராம எல்லைக்குள் போகும்போது வட்டாட்சியரிடமோ,

வருவாய் ஆய்வாளரிடமோ தகவல் தெரிவித்துவிட்டு தான் போகவேண்டும் என்றால் எனக்கு தெரியாது. எதிரிகளிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாக கூறுவதில் எத்தனை பக்கங்கள் எழுதப்பட்டது எங்கு வைத்து தட்டச்சு செய்யப்பட்டு பிரதி எடுக்கப்பட்டது, எத்தனை பிரதிகள் எடுக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்திட்டதாக சொல்லும் பக்கத்தை தவிர மற்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அ.சா.ஆ1 புகாரில் யாரிடம் இருந்து தகவல் வந்தது என்றும், போன் மூலமாகவா அல்லது நேரடியாகவா என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். தற்போதும் யாரிடம் இருந்து தகவல் கிடைக்கப்பெற்றது என்பது என்னால் கூறமுடியாது என்றால் சரிதான். அது தலையாரிக்கு தான் தெரியும். எங்களுடைய அலுவலக விதிமுறையின்படி போலீசார் புலன்விசாரணைக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டியது கடமை என்றால் சரிதான். இறந்துபோன நபர் குப்புற கிடந்ததால் காயங்கள் விவரத்தை பார்க்கமுடியவில்லை என்றால் சரிதான். பிரேதம் குப்புற கிடந்ததாக தான் அ.சா.ஆ.1 புகாரில் சொல்லவில்லை. ஆனால் குப்புறதான் கிடந்தது. பிரேதத்தை திருப்பிபோட்டு என்னென்ன காயங்கள் இருந்தது என்பதை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். புகாரில் பற்கள் வெளியே தெரிந்த நிலையில் காணப்பட்டதாக சொல்லியிருக்கிறேன் என்றாலும் போலீசார் சொல்ல சொல்ல புகாரை நான் எழுதி கொடுத்தேன் என்றாலும் சரியல்ல. பிரேதத்தில் முகம் மட்டும் லேசாக பார்க்கக்கூடிய நிலையில் இருந்தது. புகாரில் இறந்துபோன நபரின் கண்கள் எவ்வாறு காணப்பட்டது என்பதை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரம்,. விதத்தில புகார் மனு எதுவும் காவல் நிலையத்தில் நான் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நாள், நேரம்,. விதத்தில எந்த எதிரியும்

எந்தஒரு வாக்குமூலமும் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனடிப்படையில் எந்த ஒரு சான்று பொருளும் நான் சொன்ன விதத்தில் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க காவல் நிலையத்தில்வைத்து தயார் செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களிலும் ஒரே நாளில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக்கொண்டதன்பேரில் அவர்களுகக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரேதத்தை சம்பவ இடத்தில் வைத்து போலீசார் போட்டோ எடுத்தார்களா என்றால் ஞாபகமில்லை. சம்பவ இடத்திற்கு மோப்ப நாய் வரவழைக்கப்பட்டு விசாரணை நடந்தது என்றால் சரிதான். சான்று பொருட்களை கைப்பற்றி தயார் செய்ததாக சொல்லப்படும் அத்தாட்சிகளில் எதிரிகளிடம் கையொப்பம் வாங்கினார்களா என்றால் எனக்கு தெரியாது. அனைத்து கையொப்பங்களையும் காவல் நிலையத்தில் வைத்து போட்டு கொடுத்துவிட்டு தற்போது கட்டாயத்தின்பேரில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>5, 6 ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் பொதுவாக ஆவணம்தயார் செய்யும்போது என் கையொப்பத்தின் அடியில் தேதி குறிப்பிடவேண்டும் என்றால் சரிதான். பொதுவாக இதுபோன்ற வழக்குகளில் நாங்கள் தனியறிக்கை தயார் செய்வோம் என்றால் சரியல்ல. பொதுவாக சம்பவ இடத்தை பார்வையிடும்பேழது அது எந்த பகுதி என்பதற்காக அறிக்கை தயார் செய்வோம் என்றாலும் பக்கத்தில் விசாரித்த நபர்களின் விவரத்தை அதில் குறிப்பிடுவோம் என்றால் சரிதான். அதுபோன்ற நடைமுறையை இந்த வழககில் கடைபிடிக்கவில்லை என்றால் சரிதான். எந்த அறிக்கையும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். அ–சா.ஆ.1 புகார் மட்டும் தான் காவல்

நிலையத்தில் கொடுத்தேன். நான் பார்வையிட்ட பிரேதம் எரிந்த நிலையில் புகைந்து கொண்டிருந்ததாக புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எங்கள் அலுவலகத்தில் இருந்து சம்பவ இடத்திற்கு என்ன முறையில் பயணபட்டோம் என்ற விவரத்தை புகாரிலும், ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். துரைசாமிபுரத்தில் இருந்து தெற்குகல்வேடு சுமார் 4 கிமீ தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து கைப்பேசி வாயிலாக காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்ததாக புகாரில்சொல்லவில்லை என்றால் சரிதான். தகவல் கொடுத்தவுடன் சுமார் கால் மணிநேரத்தில் சம்பவ இடத்திற்கு போலீசார் வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். என்னை அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டார்கள் என்றால் சரிதான். நான் காவல் அதிகாரிகளுடன் பிரேதம் கிடந்த இடத்தில் சுமார் 1 மணிநேரம் இருந்தேன். பிரேதம் காவல துறையினர் வந்தவுடன் அவர்களது பாதுகாப்பில் எடுத்து கொண்டார்கள் என்றால் சரிதான். புகார் மனுவில் போலீசார் சம்பவ இடத்தில் விசாரித்ததையும், சடலத்தை போலீசார் பாதுகாப்பில் எடுத்து கொண்டதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சடலத்தின் தலை எந்த திசையை நோக்கி இருந்தது, கால் எந்த திசையை நோக்கி இருந்தது என்பதை புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அசா.ஆ.1 புகாரில் என் கையொப்பத்திற்கு கீழே தேதி குறிப்பிட்டுள்ளேன். சம்பவ இடத்திற்கு மோப்பநாய் மற்றும கைரேகை நிபுணர்கள் விசாரணைக்கு வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் பணிமேற்கொண்ட விவரத்தை புகாரிலும், ஆய்வாளர் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் ஆய்வாளர் மேற்கொண்ட பிரேத விசாரணை விவரத்தைபுகாரில் சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையானவிவரங்களை மறைத்து புகாரை மேலோட்டமாக கொடுத்திருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த

..

வழக்கு பணி விவரம் தொடர்பாக என்னுடைய பணி சார்ந்த பதிவேடுகளில் துலங்காது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் கைப்பற்றுதல் அத்தாட்சிகள் ஆகியவற்றின்போது நான் கலந்து கொண்ட விவரங்கள் என் பணி பதிவேடுகளில் துலங்காது என்றால் சரிதான். நான் அரசு அலுவலர் என்பதால் இந்த வழக்கில் அழைப்பு சாட்சியாக இருந்தேன் என்றால் சரிதான். அந்த அடிப்பைடையில் ஆவணங்களில் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். எனக்கு நேரடியாக தெரியாத சங்கதிகளை முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட முதல்தகவல்அறிக்கையின் நகலை எனக்கு கொடுத்தார்கள். ஆய்வாளர் விசாரணையில் முதல் தகவல் அறிக்கையின் நகல் பெற்று கொண்ட விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள், நேரத்தில் முதல் தகவல் அறிக்கை தயாரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. மறுநாள் தான் 6 மணிக்கு நீதிமன்றத்தில் சார்வு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. காலதாமதமாக உருவாக்கப்பட்ட ஆவணங்களில் போலீசாருக்கு அனுசரணையாக சாட்சி கையொப்பம் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. (கூடுதலாக 1 முதல் 4 வரையிலான எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை 5, 6 எதிரிகள் தரப்பில் ஏற்றுகொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

**மறுவிசாரணை :**இல்லை

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அளித்த சாட்சியம் அவர் கூறிய அதே வார்த்தைகளால் என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் எதிரி / எதிரிதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி **கையொப்பம்** செய்துள்ளார்.

ஒம்/–எம்.பி.முருகன்
அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
தூத்துக்குடி.